| | | |
|---|---|---|
| சாட்சி : PW2 பெருமாள் | அ.வ.எண். 27/2019 | 22.01.2025 |

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி இந்த வழக்கில் என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், எதிர் தரப்பினர் என்ன கட்சி செய்துள்ளார் என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நிலத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி நிலத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. எனது கிராமத்தில் கருப்பண்ணன், ராமசாமி, பெரியண்ணன் ஆகியோர் பட்டையதாரராக இருந்தனர் என்றால் சரிதான். மேற்படி பெரியண்ணனின் மகன் 1ம் பிரதிவாதி வெங்கடாதிரி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பட்டையதாரராக இருந்தார் என்றால் இல்லை, கருப்பண்ணன் மற்றும் ராமசாமி தான் பட்டையதாரராக இருந்தார். 1ம் பிரதிவாதி தனது தகப்பனார் வழியில் பட்டையதாரராக இருந்து அவர் அந்த உரிமை கேட்டு அந்த பொறுப்பை எனது தந்தை கருப்பண்ணனுக்கு கொடுக்கப்பட்டுவிட்டது. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல, நல்லது கெட்டத்திற்கு பேசி கொள்வோம். எனது கிராமத்தில் ஒருவர் இறந்துவிட்டார் இறந்துபோன நபரின் ஆண் வாரிசுகள் தான் இறுதி சடங்கு செய்வார்கள் என்றால் சரிதான். இறந்துபோன நபருக்கு ஆண் வாரிசுகள் இல்லை என்றால் இறந்துபோன நபரின் பங்காளிகளில் ஆண் வாரிசு உள்ளவர்கள் செய்வார்கள் என்றால் சரிதான். கருப்பண்ணன், பழனியாயி ஆகியோருக்கு நான் மேற்சொன்ன வகையில் 1ம் பிரதிவாதி இறுதி சடங்கு செய்தார் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி மோசடி செய்துள்ளதாக சொல்லியுள்ளதில் என்ன மோசடி என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல

இயலாது என்றால் ராமசாமிக்கு 3 பெண் குழந்தைகள், கருப்பண்ணனுக்கு வாரிசுகள் இல்லை, பெரியண்ணனுக்கு 1ம் பிரதிவாதி வாரிசு ஆவார். மேற்சொன்ன 3 நபர்களுக்கும் 1ம் பிரதிவாதி தான் வாரிசு என கூறி வருகிறார். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள தீர்ப்பு நகலை நான் படித்து பார்க்கவில்லை. மேற்படி தீர்ப்பு நீதிமன்றத்தால் பெறப்பட்டது, அந்த தீர்ப்பை நான் பார்க்காத காரணத்தினால் அதை உண்மையா, பொய்யா என்று என்னால் சொல்ல முடியாது. வாதி காமாட்சி தான் எனக்கு வழக்கு பற்றி சொல்லி சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்திற்கு வாதி காமாட்சி தான் விவரம் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் ஊர் பட்டையதாரராக இருந்த போது 1ம் பிரதிவாதி நிலத்தை மற்றவர்களுக்கு பிரித்து கொடுத்துள்ளேன் என்றால் பங்குதாரர்களுக்கு மட்டும் தான் பிரித்து கொடுத்துள்ளோம். 1ம் பிரதிவாதி தான் மேற்படி 3 நபர்களின் பங்கில் தற்போது வீடு கட்டியுள்ளார். 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான நிலத்தை ஊர்காரர்களுக்கு பிரித்து கொடுத்ததில் ஏற்பட்ட விரோதத்தின் காரணமாக 25 ஆண்டுகளாக 1ம் பிரதிவாதிக்கும், எனக்கும் பேச்சு, வார்த்தை இல்லை என்றால் சரியல்ல. பேச்சு வார்த்தை இல்லாத காரணத்தினால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கருப்பண்ணனின் வாரிசுகள் யார் என்று நான் ஆவணத்தை பார்க்கவில்லை என்றால் கருப்பண்ணனுக்கு வாரிசுகள் இல்லை. அதற்கான ஆவணங்கள் இல்லை. ராமசாமி தான் அனுபவம் செய்துவந்தார். ராமசாமி அனுபவம் செய்துவந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.